தினத்தந்தி DAILY THANTHI
வெல்க தமிழ்
22.10.2024 (செவ்வாய்க்கிழமை)

மார்பக புற்றுநோய் குறித்து

# விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டம்

புதுச்சேரி, அக்.22-
இந்தியாவில் பெண்கள் மத்தியில் மார்பக புற்றுநோய் பரவலாக காணப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் சுமார் 2 லட்சம் பெண்களுக்கு மார்பக புற்றுநோய் இருப்பது கண்டறியப்படுகிறது. மார்பக புற்றுநோயை வெல்ல ஆரம்ப நிலையில் கண்டுபிடித்தல் மற்றும் சரியான சிகிச்சை அளித்தல் அவசியமாகும். மக்களிடம் விழிப்புணர்வு இல்லாததால் நோய் முற்றிய நிலையில் கண்டுபிடிக்கப்படுவது இந்தியாவில் பொதுவான பிரச்சினையாக உள்ளது என்று ஜிப்மர் தெரிவித்துள்ளது.

உலக அளவில் அக்டோபர் மாதம் மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு மாதமாக கொண்டாடப்படுகிறது. இதையொட்டி புதுச்சேரி ஜிப்மர் புற்றுநோயியல் துறை சார்பில் விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டம் நடந்தது. ஜிப்மரில் இருந்து புதுவை கடற்கரை காந்தி சிலை வரை சுமார் 6 கிலோ மீட்டர் தூரம் இந்த ஓட்டம் நடைபெற்றது.

ஜிப்மர் இயக்குனர் (பொறுப்பு) டாக்டர் கவுதம் ராய், மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் துரைராஜன் ஆகியோர் மாரத்தான் ஓட்டத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தனர். இதில் சுமார் 150 ஜிப்மர் மாணவர்கள், ஊழியர்கள், சமூக சேவகர்கள் கலந்துகொண்டனர்.